12.09.2022

**OS.No.179/2019**

**வா.சா.3- பாலசுப்ரமணியம்**

**குறுக்கு விசாரணை**

அழைப்பாணையின் பேரில் தான் சாட்சியமளிக்க வந்திருக்கிறேன். நான் அழைப்பாணையை பெற்றுக்கொண்டு வாதியின் வழக்கறிஞரை கோயமுத்தூர் அலுவலகத்தில் சந்தித்தேன் என்றால் சரியல்ல. அழைப்பாணையில் என்ன காரணத்திற்காக சாட்சியமளிக்க வேண்டுமென்று குறிப்பிடப்படவில்லை என்றால் சரி தான். நான் 2011 ஆம் ஆண்டு முதல் வழக்கு சொத்தில் வாடகைக்கு இருப்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.16 ல் உள்ள கையெழுத்து என்னுடையது தான். மேற்படி ஒப்பந்தம் போடும்போது சொத்து யார் பேரில் உள்ளது என்று வில்லங்கம் பார்க்கவில்லை. நான் உண்மையான உரிமையாளர்களிடம் ஒப்பந்தம் ஏற்படுத்தவில்லை என்றால் சரியல்ல. வாதியும், 1 முதல் 3 பிரதவதிகளும் கேட்டுக்கொண்டதின்படி வழக்கிற்காக இந்த ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரியல்ல. அசல் உரிமையாளர்களிம் ஒப்பந்தம் ஏற்படுத்தாததால் ஒப்பந்தம் ஏற்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. வழக்கு சொத்து பெருமாநல்லூர் நால் ரோடு, குன்னத்தூர் ரோடு பெருந்துறை பஸ் ஸ்டாப்பில் மையமாக அமைந்துள்ளது என்றால் சரிதான். மகேந்திரன் என்பவர் அதில் எம்.எம்.க்ளாத் என்ற துணிக்கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். அலமேலு மற்றும் குமார் ஆகியோர் 2014 ஆம் ஆண்டு சொத்தை மகேந்திரனுக்கு விற்பனை செய்து விட்டனர் என்றால் அது எனக்கு தெரியாது. அவர் கிரையம் பெற்ற பின்பு வங்கியில் மேற்படி சொத்தை அடமானம் வைத்து கடன் பெற்றும், வருவாய்துறை ஆவணங்களை தன் பெயரில் மாற்றியும் உள்ளார் என்றால் எனக்கு தெரியாது. நான் வழக்கு சொத்தில் ஒரு ஆக்கிரமிப்பாளராக தான் கருதப்பட முடியும் என்றால் தவறு. வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி மற்றும் பிரதிவாதிகளுக்கு இடையே உள்ள பரிவர்த்தனை பற்றி எனக்கு தெரியாது என்றால் சரிதான். அதனால் என் சாட்சியம் ஏற்றுக் கெள்ளத்தக்கதல்ல என்ற சரியல்ல.

Sd/- **பாலசுப்ரமணியம்**

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.

12.09.2022

**OS.No.179/2019**

**வா.சா.2- மகாலிங்கம்**

**குறுக்கு விசாரணை**

அழைப்பாணையின் பேரில் தான் சாட்சியமளிக்க வந்திருக்கிறேன். என்னிடம் காட்டப்படும் அழைப்பாணையில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். அழைப்பாணை வாங்கிய பிறகு வாதியின் வழக்கறிஞரை சந்தித்தேன். அவருடைய அலுவலகம் கோயமுத்தூரில் உள்ளது. அங்கு சென்று பார்த்தேன். வாதியின் வழக்கறிஞர் சொல்லிக் கொடுத்தவாறு நான் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. அழைப்பாணையில் விவரங்கள் எதுவும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். 20 ஆண்டுகளாக நான் வழக்கு சொத்தில் மெக்கானிக் ஷாப் வைத்திருக்கிறேன் என்பதற்கு ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை. மின் இணைப்பு வரி மற்றும் குடிநீர் இணைப்பு வரி ஆகியவை கட்டியிருப்பதாக சொல்லியிருக்கிறேன். ஆனால் அதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை. என்னிடம் வா.சா.ஆ.14 ஆவணம் 2019 ஆம் அண்டு நான் ஏற்படுத்திய வாடகை ஒப்பந்தமாகும். அதில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். 2021 ஆம் ஆண்டு தேதியிட்ட வா.சா.ஆ.15 ஆவணம் வாடகை நீட்டிப்பு ஒப்பந்தம். அதிலுள்ள கையெழுத்து என்னுடையது தான். குமாரிடம் வாய்மொழியாக தான் சொன்னேன். எழுத்து மூலமாக சொல்லவில்லை. மற்ற உரிமையாளர்களிடம் நான் அதுபற்றி கேட்கவில்லை. குமாரிடம் தான் வாடகை கொடுப்பேன். 2019 ஆம் ஆண்டு ஒப்பந்தம் ஏற்படுத்தும்போது சொத்தின் அப்போதைய உரிமையாளர்கள் யார் என்று ஆவணங்கள் எதையும் பார்த்து நான் தெரிந்து கொள்ளவில்லை என்றால் சரிதான். 2019 ஆம் ஆண்டு வா.சா.ஆ 14 ஒப்பந்தம் போடுவதற்கு முன்பே வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளும் வழக்கு சொத்தின் உரிமையாளர்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. உண்மையான உரிமையாளர்களிடம் வாடகை ஒப்பந்தம் போடவில்லை என்றால் சரியல்ல. வழக்கு தாக்கல் செய்த பின்னிட்டு வாதியும், 1 முதல் 3 பிரதிவாதிகளும் கேட்டுக்கொண்டதற்கிணங்க வா.சா.ஆ.14 மற்றும் 15 ஆவணங்களை தயாரித்துள்ளேன் என்றால் சரியல்ல. உண்மையான உரிமையாளர்களிடம் நான்ஒப்பந்தம் போடாததால் ஒப்பந்தம் செல்லத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் கட்டிடத்தின் சட்டப்பூர்வமான வாடகைதாரர் இல்லை என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமிப்பாளர் என்று தான் கருதமுடியும் என்றால் தவறு. வாதி மற்றும் 1 முதல் 3 பிரதிவாதிகளுக்கும் வாடகை வாங்குவதற்கு எந்த உரிமையும் இல்லை என்றால் சரியல்ல. என்னுடைய சாட்சியம் ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

வழக்கு சொத்து பெருமாநல்லூர் நால்ரோட்டில் பெருந்துறை பஸ் ஸ்டாப்பில் அமைந்துள்ளது என்றால் சரிதான். அதில் மகேந்திரன் என்பவர் எம்.எம்.க்ளாத் என்ற துணிக்கடை நடத்தி வருகிறார் என்றால் சரிதான். மகேந்திரன் 2014 ஆம் ஆண்டு தன்னுடைய கடையை விரிவாக்கத்திற்காக கிரயம் பெற்று விட்டார் என்றால் எனக்கு தெரியாது. மகேந்திரன் கடையை விரிவாக்கி கட்டிடம் கட்டுவதற்காக என்னையும், பாலசுப்ரமணியத்தையும் காலி செய்ய சொன்னார் என்றால் மகேந்திரனின் அப்பா காலி செய்ய சொன்னார். அதனால் நான் வாதிக்கு ஆதரவாக பொய் சாட்சியம் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Sd/- மகாலிங்கம்

*Take down by/before me in open court read over/interpreted to the witness in the presence of the accused/accused's pleader and admitted by the witness to be correct.*

Sd/-Thiru.K.Suresh Kumar, B.A., B.L.,
Subordinate Judge,
Avinashi.